புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

=============================================================

# சிற்றிலக்கியம், சினிமாப் பாடல்களில் பெண்களின் கண்கள்

=============================================================

முனைவர் ம.சரளாதேவி,
தலைவர் மற்றும் உதவிப்பேராசிரியர் (சுழற்சி-2),
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி(தன்னாட்சி),
திருப்பத்தூர்.

**முன்னுரை**

முற்காலத்தில் இருந்து இக்காலம் வரை பெண்களின் கண்களைப் பல்வேறு நிலைகளில் பிறவற்றுடன் ஒப்பிட்டு உவமைப்படுத்திக் கூறியுள்ளனர். அந்த வகையில் பெண்களின் கண்களை வர்ணித்து கவிதை எழுதாத கவிஞர்களே இல்லை என்று கூறலாம். இதன் அடிப்படையில் பெண்களின் கண்களை ஒப்பிட்டுக் கூறும் சிற்றிலக்கியங்களும் (திருக்குற்றாலக் குறவஞ்சி, கலிங்கத்துப் பரணி, முக்கூடற்பள்ளு, அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து) சினிமாப்பாடல்களும் இந்த ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஆராயப்படுகிறது.

**கண்கள்**

கண் என்பது நமது உடலில் மிக மிக முக்கியமான ஒரு உறுப்பாக உள்ளது. கண்களால்தான் நாம் இந்த உலகில் உள்ள மனிதர்கள் மற்றும் உயிரினங்கள் அனைத்தையும் பார்க்க முடிகிறது. இப்படிப்பட்ட கண் நமது உடலில் சரியாகச் செயல்படவில்லை என்றால் பல்வேறு சிக்கல்களை நாம் சந்திக்க வேண்டிய சூழல் உருவாகின்றது. மற்றவர்கள் உணர்வுகளைப் புரிந்துகொள்ள கண் மிகவும் துணைபுரிகின்றது.

"கண்என்பதற்குத் தமிழில் பல்வேறு பெயர்கள் உள்ளன. நேத்திரம், நாட்டம், நோக்கம், சால், அக்கம், திருக்கு, திட்டி, தாரை, விலோசனம், பார்வை, அம்பகம், கோ" இவையனைத்தும் கண்ணைக் குறித்த தமிழ்ச் சொற்களாகும்.

மனிதன் பெறத்தக்க ஆறு அறிவுகளுள் நான்காவது அறிவு கண்ணின் வழியாகப் பெறப்படுகின்றது. இதனைத் தொல்காப்பியர்

**"நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே" (தொல்.மரபி.27)**

அறுபத்து மூன்று சிவனடியார்களில் ஒருவர் கண்ணின் பெயராலேயே கண்ணப்பன் என்றழைக்கப்படுகின்றார். திண்ணப்பன் என்ற இயற்பெயர் கொண்ட அவர், திருக்காளத்தி அப்பர் மேல் கொண்ட பேரன்பால் தனது கண்களையே பெயர்த்து அவருக்கு அப்பினார் என்று சேக்கிழார் கூறுகிறார்

**"இதற்கினி என்கண் அம்பால்**
**இடந்தப்பின் எந்தை யார்கண்**
**அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர்**
**நிற்கவும் அடுக்கும் என்று**
**மதர்த்தெழும் உள்ளத்தோடு**
**மகிழ்ந்து முன்னிருந்து தங்கண்**
**முதற்கரம் அடுத்து வாங்கி**
**முதல்வர்தங் கண்ணில் அப்ப" (பெரிய.173)**

இயேசு கண்களைப் பற்றிக் கூறும்போது கண் உடலின் விளக்கு என்று குறிப்பிட்டு நல்ல கண், கெட்ட கண் என்று வேறுபடுத்துகின்றார். உன் கண் தெளிவாயிருந்தால் மகிகழ்ச்சியாக உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும் (மத்தேயு 6 : 22-23) என்கிறார்.

கண் உடையவர் என்று உயர்வாகக் கூறப்படுவோர் கற்றவரே ஆவர். கல்லாதவர்கள் தம் முகத்தில் இரண்டு புண் உடையவர்கள் என்று திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

**"கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையவர் கல்லாதவர்("குறள்.393)**

தொல்காப்பியம் முதற்கொண்டு கண்களைப் பற்றிப் பேசியிருந்தாலும் கண்கள் குறித்தப் பழமொழிகளும் வழக்கத்தில் உள்ளதை அறியமுடிகின்றது.

**"கண் உள்ள போதே காட்சி"**
**"கண்குத்திப் பாம்புபோல இருந்தாலும்**
**கண்ணில் மண்ணைப் போடுகிறான்"**
**"கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் எதற்கு"**
**"கணவனே கண் கண்ட தெய்வம்"**
**"காதலுக்குக் கண் இல்லை" (பழமொழிகள்)**

கண்களை ஒப்பிட்டுக் கூறும் வகையில் பல்வேறு செய்திகள் முற்காலம் முதல் இக்காலம் வரை வெளிவந்துகொண்டுதான் இருக்கின்றன இதில் பழமொழிகளும் முக்கிய இடம் வகுக்கின்றன.

**சிற்றிலக்கியங்களில் கண்கள்**

பெண்களின் கண்களைப் பல்வேறு நிலையில் ஒப்பிட்டுக் கவிதை புனைந்துள்ளனர். சிற்றிலக்கியங்கள் கண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளதைச் சிற்றிலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. சிற்றிலக்கியங்கள் கண்களைப் பெரும்பாலும் மீன்களுடன் ஒப்பிட்டுள்ளதை அறியமுடிகின்றது.

கலிங்கத்துப்பரணி கண்கள் ஒன்றோடு ஒன்று போரிடும் என்று குறிப்பிடுகின்றது.

**"அஞ்சியே கழல் கெடக் கூடலிற் பொருது சென்று**
**அணி கடைக் குழையிலே விட அடர்த்து எறிதலால்**
**வஞ்சி மானதன் விடும் படையினிற் கொடிய கண்"(கலி.32)**

மெல்லியலாரான உங்கள் கடைக்கண்கள், உங்கள் கணவர்களுடன், அவர்கள் கூடும் காலத்தில், கெண்டை மீன்கள் பயந்து தோற்று ஓடுவது போல, ஒன்றோடு ஒன்று பிறழ்ந்து போரிட்டு வெல்லும். அழகிய காதணிகளில் அலை மோதி விழும்படி ஒளி வீசுவதால், வஞ்சிப் பூமாலையை அணிந்த முதற்குலோத்துங்கன் ஏவிய வேற்படையைப் போன்ற கொடிய கண்களையும், இளம் பருவத்தையும் உடைய அழகிய பெண்களே! என்று கலிங்கத்துப் பரணி எடுத்துரைக்கின்றது.

முக்கூடற்பள்ளு பெண்களின் கண்கள் பற்றிக் குறிப்பிடும்போது,

**"பஞ்சலைமீன் கெண்டைகள் எனவே**
**அஞ்சனந் தோய் கண்கள் இரண்டும்**
**பக்கக் கொண்டையினும் குழையினும்**
**தைக்கக் குதிக்க "(முக்கூடற்.9)**

பசுமை வண்ணம் பூசிக்கொண்ட கொண்டை மீன்களைப் போல அஞ்சன மை தீற்றிய அவளுடைய கண்கள் இரண்டும் அவள் ஒரு பக்கமாகப் போட்டிருந்த கொண்டை மீதும், மற்றொரு பக்கத்துக் காதின் குழையினும் தைக்கப் போவன போலக் குதித்தாடிக் கொண்டிருந்தன என்று முக்கூடற் பள்ளு எடுத்துரைக்கின்றது.

**சேலேறுங் கலகவிழிக் கணைதீட்டிப்**
**புருவநெடுஞ்சிலைகள் கோட்டி(திருக்.குற்.4)**

ஆடவர் உள்ளத்தே கலகம் விளைவிக்கும் கெண்டை மீனை ஒத்த தம் விழிக்கண்களைத் தீட்டியவர்களாக அவர்கள் வருகின்றனர் என்று திருக்குற்றாலக் குறவஞ்சி குறிப்பிடுகின்றது.

**"தவ யோகம் வென்ற நேகம் -வஞ்சம்**
**துஞ்சுவிழி நஞ்சினிலும் வேகம்"(கா.சிந்து.15)**

அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து நஞ்சு போன்ற வஞ்சம் நிறைந்த விழி என்று பெண்களின் விழியைச் சுட்டுகின்றது.

சிற்றிலக்கியங்கள் பெண்களின் கண்களுக்குப் பெரும்பான்மை மீனையே அதிகம் ஒப்பிட்டுக் காட்டியுள்ளன.

**சினிமாப் பாடல்களில் கண்கள்**

சிற்றிலக்கியங்கள் மட்டுமல்லாமல் திரையிசைப் பாடல்களிலும் பெண்களின் கண்களைப் பலவற்றுடன் பல கவிஞர்கள் ஒப்பிட்டுள்ளனர்.

**"முத்துக்களோ கண்கள் (கண்ணதாசன், நெஞ்சிருக்கும்**
**வரை)**
**"வேலும் வில்லும் விளையாட**
**வெள்ளைத் தாமரை கதை சொல்ல" (கண்ணதாசன், வீர அபிமன்யூ)**
**"கண்களிரண்டை வேலென எடுத்து**
**கையோடு கொண்டானடி" (கண்ணதாசன், சாந்தி)**
**"பால்வண்ணம் பருவம் கண்டு**
**வேல் வண்ணம் விழிகள் கண்டு" (கண்ணதாசன், பாசம்)**
**"மானல்லவோ கண்கள் தந்தது" (கண்ணதாசன், நீதிக்குப்பின்**
**பாசம்)**

கவிஞர் கண்ணதாசன் பெண்களின் கண்களை முத்துக்கள், வேல், மானின் கண்கள் என்று வேறுபட்ட விதத்தில் ஒப்பிட்டுக் கூறியுள்ளார். முத்துக்களைப் பற்களுக்கு ஒப்பிட்டுக் கூறுவர். ஆனால் இவர் கண்களுடன் ஒப்பிட்டுள்ளார்.

**"மதுரையில் பறந்த மீன்கொடியை உன்**
**கண்களில் கண்டேனே" ( வாலி, பூவா தலையா)**
**"மீனாட்டம் கண்கொண்ட மீனாட்சி**

**கோபங்கள் கூடாது காமாட்சி" (வாலி, பிள்ளையோ பிள்ளை)**

**"சந்திரோதயம் ஒரு பெண்ணானதோ?**

**செந்தாமரை இரு கண்ணானதோ? "(வாலி, சந்திரோதயம்)**

**"ஞாயிறு என்பது கண்ணாக**

**திங்கள் என்பது பெண்ணாக" (வாலி, காக்கும் கரங்கள்)**

கவிஞர் வாலி தன்னுடைய பாடல்களில் கண்களை மீன், செந்தாமரை, ஞாயிறு போன்றவற்றுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

**"விழிவேல் வீச்சிலே கனிவாய் பேச்சிலே பெண்கள்**

**வீரர்தம்மை வெல்வார் ஒரே மூச்சிலே" (உடுமலை நாராயணகவி, தங்கப் பதுமை)**

**"குண்டூசி கண்கள் ரெண்டும் குத்துது பாரு**

**கொல்லாமல் அது ஆளைக்கொல்லுது பாரு" (மருதகாசி, ராஜா மலையசிம்ஹன்)**

**"தும்பைப்பூ முகத்தில் துளசிப்பூ விழிகள்**

**துளசிப்பூ விழியில் குவளைப்பூ ஒளிகள்" (காஜா, வேலி தாண்டிய வெள்ளாடு)**

**"மானிடம் பெற்ற விழி மதியிடம் பெற்ற முகம்" (புலமைப்பித்தன், பல்லாண்டு வாழ்க)**

கண்களை வேல் என்று நாராயணகவியும் குண்டூசி என்று மருதகாசியும் துளசிப்பூ என்று காஜாவும் மானிடம் பெற்ற கண் என்று புலமைப்பித்தனும் வேறுபட்ட நிலையில் சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளதை அறிய முடிகின்றது. பெண்களின் கண்களை இயற்கையுடன் ஒப்பிட்டுக் கூறிய நிலை மாறி குண்டூசியுடன் ஒப்பிட்டுள்ளது வேறுபட்டுக் காணப்படுகின்றது.

**முடிவுரை**

உடல் உறுப்புகளில் கண்கள் அறிவின் திறவுகோலாகவும் எண்ணங்களின் வெளிப்பாடாகவும் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளும் கருவியாகவும் விளங்குவதனால்தான் சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கண்களால் பேசிக்கொள்கின்றனர். அதனால்தான் கண்கள் சிலருக்கு மீன், வேல், மலர், குண்டூசி போன்று காட்சியளிப்பதாகக் கவிஞர்கள் கூறுகின்றனர். பார்ப்பவர்களின் சிந்தனை அடிப்படையில் கண்கள் வேறுவேறாகத் தோன்றினாலும் கண்கள் உள்ளத்தின் எண்ணங்களைப் படம்பிடித்துக் காட்டுவதில் முக்கியப் பங்க வகிக்கின்றது என்பது முற்றிலும் உண்மை.

**துணை நின்ற நூல்கள்**


1. ச.வே.சுப்பிரமணியன், தொல்காப்பியம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.2003
2. புலியூர்க் கேசிகன், கலிங்கத்துப் பரணி, பாரி நிலையம், சென்னை.2015
3. புலியூர்க் கேசிகன், திருக்குற்றாலக் குறவஞ்சி, பாரி நிலையம், சென்னை.2013
4. புலியூர்க் கேசிகன், முக்கூடற்பள்ளு, பாரி நிலையம், சென்னை. 2012
5. எச்.வைத்தியநாதன், அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்து, தமிழ் எழுத்ததாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை. 1986